




பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50








சுடர் 5: பிரமோதூத ஹூ ஆவணி மீ 05 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 29 (21 - 08 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 172


# விமானக் குண்டு வீச்சினால் நேற்று மட்டும் 12 பேர் மரணம்!

## வட்டுக்கோட்டை, அச்சுவேலி, பாஷையூர் உட்பட பல இடங்களில் அனர்த்தம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 21

யாழ். குடாநாட்டில் நேற்று பரவலாக பல இடங்களிலும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காலை முதல் மாலைவரை மாறி மாறி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் பன்னிரண்டுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இருபத்திஐந்துக்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

யாழ். பாஷையூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி, விளான், நுணாவில், வடக்கு புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்கள் உட்பட பல பகுதிகளில் நேற்று பொம்மர்கள் அனர்த்தம் புரிந்தன.

யாழ். நகரப் பகுதியிலேயே அனேகமாக இடம்பெற்று வந்த பொம்மர் தாக்குதல்கள் நேற்று ஒரே சமயத்தில் குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் பரவலாக நடத்தப்பட்டன.

இதில் இருந்து இலங்கை விமானப் படையின் வான் தாக்குதல்கள் தற்போது குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது என்பது தெளிவாகின்றது. [உ-3-5]

## பாஷையூரில் மூவர் மரணம்!

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ் சின்னக்கடைப் பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறி பாஷையூரில் உள்ள தனியார் ஹோட்டல் கட்டடம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்தோர் மீது நேற்று நண்பகல் 2 மணியளவில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலில் மூவர் பலியாகினர்.

சின்னக் கடையைச் சேர்ந்த புடவை வியாபாரி தேவா (45 வயது), அல்லிராணி என்ற இளம் பெண் ஆகியோரும் மற்றொருவருமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு காயமுற்ற ராஜி (வயது 22), ராஜன் (வயது 34) சுஜி (வயது 17), ரஞ்சி (வயது 35), பாபுஜி (வயது 12) ஆகியோர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-3-5)

## அச்சுவேலி பொதுச் சந்தையிலும் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர்

— அச்சுவேலிச் செய்தியாளர்; ஞான ஆதவன் —

அச்சுவேலி, ஆக. 21

அச்சுவேலிப் பொதுச்சந்தையில் நேற்று நண்பகல் 11.30 மணியளவில் திடீரென இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த அலுவலகப் பொறுப்பாளர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமுற்றனர்.

பொதுச் சந்தையின் வடக்குப்பகுதிக் கட்டடமும், உப அலுவலகக் கட்டடமும் சேதமடைந்தன.

உப அலுவலகப் பொறுப்பாளர் திரு. கே. நடராசா (வயது-50), பாக்கியராசா சேகர் (வயது-20) ஆகியோரி உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

சந்தை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இந்தத் திடீர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் சந்தையில் கூடிநின்றபொதுமக்கள், வியாபாரிகள் உட்பட பலர் படுகாயமடைந்தனர். அவர்கள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியிலும், மானிப்பாயில் உள்ள போதனா ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-11)

## இரு சிறுமியர் உட்பட ஐவர் பலி! வட்டுக்கோட்டையில் நடந்த கொடூரம்

— வட்டுக்கோட்டைச் செய்தியாளர்: வ. யோகானந்தசிவம் —

வட்டுக்கோட்டை, ஆக. 21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகே (வட்டுக்கோட்டை - சித்தன்கேணி வீதியில்) நேற்றுக் காலை 10-30 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் காயமுற்றனர்.

சந்தியிலிருந்த சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முற்றாகச் சேதமுற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபங்கள், வகுப்பறைகள் என்பனவும் அருகிலிருந்த இரண்டு வீடுகளும் சேதமுற்றன.

இந்தச் சம்பவத்தில் தேடியோ திருத்துபவராகக் கடமையாற்றும் திரு. தவராசாவின் வீட்டில் இருந்த அவரது இரு பிள்ளைகளான சிவகௌரி [வயது 12], சிவச்சந்திரன் [வயது 7] ஆகியோர் உயிரிழந்தனர். அவரது மற்றொரு மகளான சிவசங்கரி உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் கந்தையா ரவீந்திரன் [வயது 41], மிருக வைத்தியர் பணிமனை ஊழியர் கிரி சிவப்பிரகாசம் (வயது 23), கொட்டைக்காட்டைச் சேர்ந்த அம்பலவாணர் நாகேஸ்வரி ஆகியோரும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடந்த சமயம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் இருந்த அதன் முகாமையாளரும், கிளைக்குழு உறுப்பினரும், மற்றொரு பெண்ணும், சிறுமியும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

சங்கக் கிளையின் விற்பனையாளர் தண்ணீர் அள்ள வெளியே சென்றதால் உயிர் தப்பினார். (உ-161)

### வெடிக்காத நிலையில் குண்டு

யாழ்ப்பாணம், ஆக. 21

வட்டுக்கோட்டைச் சந்திப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலின் போது வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் அங்கு கிடந்ததாகத் தெரியவந்தது. (உ-3-5)

## செய்திச் சாரம்

### மாங்குளம் படையினர் பின்வாங்கினர்

யாழ்ப்பாணம், ஆக. 21

மாங்குளம் முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்து படையினர் முகாம் நோக்கி பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### வயாவிளானில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 21

பலாலி இராணுவ முகாமிலிருந்து வயாவிளான் பகுதியை நோக்கி நேற்றுமாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பகவான் (சின்னத்தம்பி சதீஸ், கோண்டாவில்) வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர். (ஒ-5)

### பரந்தனில் சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 21

பரந்தன் இராணுவ முகாமிலிருந்து இரசாயனத் தொழிற்சாலைப் பக்கமாக வெளியேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் காயமுற்றோரையும் தூக்கிக் கொண்டு படையினர் முகாமுக்குப் பின்வாங்கியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஆக. 21

மாங்குளம் காட்டுப் பகுதியில் கடந்த சனிக்கிழமையன்று நடராசா என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கொழும்பில் தமிழர் கைது தொடர்கிறது

கொழும்பு, ஆக. 21

கொழும்பில் வீதிகளில் செல்லும் இளைஞர்களும், லொட்ஜுகளில் உள்ள இளைஞர்களும் திடீர் திடீரென பொலீஸாரால் கைது செய்யப்படுகிறார்கள்.

கைதான இளைஞர்களை விடுதலை செய்து கொடுப்பதற்கும் ஒரு குழு இயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## கீழிறங்கி வந்த ஹெலி உடன் பறந்து சென்றது

கொடிகாமம் - பருத்தித்துறைவீதியில் அந்தணத்திடல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிறு மாலை 4.15 மணியளவில் ஹெலி ஒன்று நிலத்தோடு தாழ்வாகப் பறந்து, சிறிது நேரத்தில் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றுவிட்டதாகத்தெரியவருகிறது.

அவ் வேளை மற்றொரு ஹெலி வானத்தில் வட்டமிட்டவாறு அப் பகுதியை நோட்டமிட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரை இறக்கும் நோக்கமாக இப் பகுதியை நோட்டமிடவே ஹெலி முயற்சி மேற்கொண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதனை அடுத்து இப் பகுதியை அண்டிய மக்கள் பெரும் பீதியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற)

## கடற்படைப் படகை அழைத்து இம்சைப்பட்ட வள்ள அகதிகள்!

— மானிப்பாய்ச் செய்தியாளர்: வி. பி. சர்மா —

மானிப்பாய், ஆக. 21

விலைகொடுத்து வினையை வாங்கும் சம்பவங்கள் வாழ்க்கையில் நடப்பது உண்டு. கஷ்டமான காலங்களில் அத்தகைய சம்பவங்கள் நிறைய நிகழ்ந்துவிடும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்புக் கருதி தமிழகம் சென்றவர்கள், கடலில் ஏற்பட்ட அலைச்சலால் அக்கரை சேர்ந்துவிட்டதாக எண்ணி, இந்தியப் படகு என்று நினைத்து இலங்கைக் கடற்படைப் படகை சைகை காட்டி அழைத்து இம்சைக்கு ஆளாகிய சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

கொழும்புத்துறைக் கடற்கரையில் இருந்து இம்மாதம் 14ஆம் திகதி இரவு புறப்பட்ட வள்ளத்தில் சென்று படாத பாடு எல்லாம் பட்டு, கடற்படையினர் தாக்கியதால் மயக்கமுற்று, அவர்களால் விடுவிக்கப்பட்டு, 9 மைல்கள் நடந்துவந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பரமநாதன் விநோதன் என்ற மாணவன் மூலம் தெரியவந்த தகவல்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருநாவுக்கரசு அணிக்கு எதிராக தடை இல்லை!

### சபாநாயகர் அறிவிப்பு

[சென்னை, ஆக. 21

அ. தி. மு. கவில் இருந்து பொதுச் செயலாளர் ஜெயலலிதாவால் வெளியேற்றப்பட்ட [illegible] களான திருநாவுக்கரசு, கே. கே. எஸ் எஸ் இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் சட்டசபை உறுப்பினர் பதவியை இழக்கமாட்டார்கள்.

— இப்படி தமிழ்நாடு சட்டசபையில் சபாநாயகர் தமிழ்க்குடிமகன் நேற்றுத் தெரிவித்தார்.

இவர்கள் மூவரும் அ. தி.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சிக்கு வராமல் உணவு லொறிகள் திரும்பின

லண்டன், ஆக. 21

கொழும்பிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நேற்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட 27 லொறிகளும் கிளிநொச்சிக்கு வந்து சேரவில்லை.

மாங்குளம் பகுதியில் கடும் சண்டை நடந்து கொண்டிருந்ததால் இந்த லொறிகள் கிளிநொச்சிக்கு முன்னேற முடியாமல் இடைவழியில் திரும்பிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கண்காணிப்புடன் இந்த லொறிகள் கொழும்பிலிருந்து புறப்பட்டன. [உ-5]

## அந்த நச்சுக் குண்டில் அடங்கியிருந்தவை. . .

யாழ்ப்பாணம், ஆக. 21

நச்சுவாயுக் குண்டுகளும் யாழ்ப்பாணத்தில் வீசப்பட்டன. இந்தக் குண்டுகளின் மிச்சங்களை பரிசோதனை செய்ததில் அவை குளோரின்-நைட்ரஜன் கலவை, பொட்டாசியம் நைட்ரேற், பொஸ்பரஸ், அலுமினியத் துகள்கள், கந்தகம், நைட்ரோசெலுலோஸ் ஆகியவற்றைக்கொண்டிருந்தன.

— இவ்வாறு யாழ்ப்பாணம் பிரசைகள் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைத்த அறிக்கை ஒன்றிலேயே இவ் விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறான குண்டுகளை வீசி நாசம்செய்வதை உடன் நிறுத்துமாறு பிரசைகள் குழு ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது. (உ)

## தமிழ்க் குழு ஒன்றுக்கு வவுனியாவில் ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 21

வவுனியாவில் தங்கி நிற்கும் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் ஆயுதம் வழங்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் நடந்த சம்பவம் ஒன்றில், இதே தமிழ்க் குழுவினரால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது சம்பந்தமான செய்தி ஏற்கனவே உதயனில் வெளியானது தெரிந்ததே. [உ]

## தமிழினக் கொலையை நடத்த உலகவங்கி நிதி பயன்படுகிறது

### அமெரிக்க மனித உரிமைகள் குழு முறையீடு

வாஷிங்டன், ஆக. 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில், தமிழினக் கொலையை நடத்துவதற்கு, சர்வதேச சமூகம் வழங்கும் நிதி வளங்களை அரசு பயன்படுத்தி வருவதாக உலக வங்கித் தலைவர் திரு. பார்பர்கொனபிளுக்கு முறையிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள தமிழர் நலன்பேணும் மற்றும் மனித உரிமைகள்குழு அனுப்பியுள்ள கடிதத்தில் இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

உதவி வழங்கும் நாடுகள் கொடுத்துவரும் நிதிகள் இலங்கை அரசு நேரடியாக பாதுகாப்புச் செலவீனத்திற்கு (20 கோடி அமெரிக்க டொலர்) பயன்படுத்தப்படுகின்றது என்பதில் சந்தேகமே இல்லை.

அவசரமாக ஆயுதக் கொள்வனவு செய்வதற்கும் இந்த நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தாங்கள் வழங்கும் நிதி வசதிகளை யுத்தத்துக்கு பயன் படுத்துவதை நிறுத்தும்படி உதவும் நாடுகள் குரல் எழுப்பாவிட்டால், அது நாட்டின் பலமிக்க சிறுபான்மை இனமொன்றை இனக்கொலை செய்வதைத் துரிதப்படுத்துவதுடன் தனிப்பட்ட உடைமைகள், சமூகச்

(4 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**"கானகத்தின் கானம்"**

மீரா வெளியீடு ரூபா 27/- தெளிந்த நீரோடையாக ஆரம்பிக்கும் இந்நாவலைத் தென்றலாகக் கொண்டு சென்று புயலாவே முடித்திருக்கிறார். "செம்பியன் செல்வன்" "சங்கரன்"-ரூபா 20/- 1956க்குப்பின் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களைச் சித்தரிக்கின்றது. [14069]

**தவறிவிட்டது**

கி. இ. பந்றிக் நித்தியானந்தன் - 700950727V என்ற இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [14074]

**தேவை**

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். [C/5172]

# வெளிநாட்டார் வெளியேற ஈராக் புதிய நிபந்தனைகள்

பக்தாத், ஆக. 21

பகைமை நாடுகளின் பிரசைகள் வெளியேற அனுமதிப்பதற்கு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் புதிய நிபந்தனைகளை நேற்று விதித்தார்.

ஈராக்கின் புதிய நிபந்தனைகளை அரசு அதிகாரி ஒருவர் பக்தாத் வானொலி மூலம் வெளியிட்டார்.

அரபு மண்ணில் இருந்து தனது படைகளை அமெரிக்கா எப்போது வெளியேற்றும்என்பதுகுறித்துஅதுதிட்டவட்டமான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றும் —

ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை ஐ. நா. பாதுகாப்புச் சபை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் — இப் நிபந்தனைகள் கூறுகின்றன.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டவுடன் ஹோட்டல்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பகைமை நாடுகளின் பிரசைகள் அனைவரும் வெளியேற அனுமதிக்கப்படுவர் என்றும் ஈராக் அறிவித்துள்ளது. இதனிடையில் — இந்தியப் பிரசைகள் அனைவரையும் வெளியேற நிபந்தனையின்றி அனுமதி வழங்கப்படுவதாக ஈராக் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் பக்தாத் சென்று ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து இந்த உடன்பாடு காணப்பட்டது. (இ-எ)

## சோவியத் கைதிகளுடன் விமானம் கடத்தப்பட்டது

இஸ்லாமபாத், ஆக. 21

சோவியத் யூனியனில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த ஏரோப்ளோட் விமானம் ஒன்றைக் கடத்திய பதினொரு சோவியத் பிரசைகள் கராச்சி விமான நிலையத்தில் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

கைதிகள் சிலரை ஸைபீரியாவுக்கு விமானத்தில் கொண்டு சென்றபோதே இக் கடத்தல் இடம்பெற்றது.

ஸைபீரிய விமான நிலையத்தில் வைத்துக் கடத்தல்காரர்கள் பயமுறுத்தி ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு, சில பயணிகளை இறக்கி விட்டனர். பின்னர் விமானத்தை தாடிகெண்ட் நகருக்குக் கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து இஸ்லாமபாத் சென்றனர். (உ-எ)

## யாழ். இந்து நூற்றாண்டு: லண்டனில் நிகழ்ச்சிகள்

லண்டன், ஆக. 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி அண்மையில் லண்டன் நகரில் கொண்டாடப் பட்டது.

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பிரிட்டன் கிளை ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சி லண்டன்-17, லோலா ஜோன்ஸ் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வீணை இசை, பரதநாட்டியம் ஆகியவை உட்பட பல நிகழ்ச்சிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி லண்டனில் நடத்தப்பட்டன. (உ)

## சீமெந்து இறக்குமதி

சீமெந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஐக்கிய அரபுக் குடியரசில் இருந்து சீமெந்தை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-எ)

## வடமராட்சி பல்கலை மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

வடமராட்சிப்பகுதியைச் சேர்ந்த யாழ்-பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேஷ பொதுக்கூட்டம் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 30மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் இதனை ஒழுங்குசெய்துள்ளது. (இ)

## இடம் மாறும்

முல்லைத்தீவு, காங்கேசன் முறை இலங்கை வங்கிக் கிளைகளை வேறு இடங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. [இ-3]

## மூடப்பட்டுள்ள நூல் நிலையம்

அச்சுவேலி பொது நூல் நிலையம் பல வாரங்களாக மூடப்பட்ட நிலையில் உள்ளது. பொதுநூல்நிலையம் மூடப்பட்டிருப்பதால் நாளாந்தம் தினசரிப் பத்திரிகை வாசிக்கும் வாசகர்களும், வரியிறுப்பாளர்களும், நூல்நிலைய அங்கத்தவர்களும் பலவேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (இ-11)

## மூளை தெரியும் குழந்தை!

கொழும்பு, ஆக. 21

மூளை வெளியே தெரியக் கூடிய, மண்டை ஓடு இல்லாத ஒரு குழந்தையை முஸ்லிம் தாய் பிரசவித்தார்.

முல்லைத்தீவில் இருந்து அகதியாகச் சென்று புத்தளத்தில் தங்கியிருந்த ஜனாபா எம். எஸ். ரஸ்ஸா என்ற பெண்ணுக்கே இந்தக் குழந்தை பிறந்தது. (அ-எ)

## எண்ணெய் உற்பத்தியை சவூதி அதிகரிக்கும்

லண்டன், ஆக. 21

வளைகுடா நெருக்கடி காரணமாக உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக, தனது எரிபொருள் உற்பத்தியைத் தன்னிச்சையான முறையில் அதிகரிக்கப் போவதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது. (அ-எ)

## அ. தி. மு. க. - காங்கிரஸ் நேற்று சென்னையில்பேரணி

சென்னை, ஆக. 21

அ.தி.மு.க தலைமை அலுவலகக் கட்டடத் தகராறு தொடர்பாக நேற்று அ.தி.மு.கவும், இந்திரா காங்கிரஸும் பேரணி ஒன்றை சென்னை நகரில் நடத்தின.

ஆயிரக் கணக்கான தொண்டர்கள் அதில் கலந்துகொண்டனர்

அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் பேரணிக்குத் தலைமை வகித்தனர்.

பின்னர் நடந்த கூட்டம் ஒன்றில் செல்வி ஜெயலலிதா பேசுகையில், அ. தி. மு. கவைப் பிளவுபடுத்தும் முயற்சியில் தி. மு. க ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டினார்.

தமிழக அரசு அ. தி. மு. க தொண்டர்கள் மீது அடக்குமுறையைப் பாவிப்பதாகவும் அவர் கூறினார். (உ-எ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

ஓய்வு பெற்ற விதானையார்
**மாணிக்கவாசகர் கந்தையா**
அவர்களின் மனைவி

**திருமதி தங்கரத்தினம்**

**மலர்வு:** 02 - 11 - 1915
**உதிர்வு:** 22 - 07 - 1990


அன்பின் தெய்வமே எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா. படுக்கையில் வைத்துப் பார்க்கக் கூடாதென்றோ நொடிப் பொழுதில் உன் உயிர் கவர்ந்தான் கொடிய காலன்.

அன்னாரின் இறுதிச் சடங்கிலும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்கேற்று ஆறுதல் அனுதாபங்களைத் தெரிவித்த சகலருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
கணவன், [illegible], மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கைதடி நாவற்குழி,
கைதடி. [14080]

## முதலாம்வருட நினைவலைகள்



**மேஜர் கந்தசாமி (டயஸ்)**
**(மயில்வாகனம் தவராஜா ஈச்சமோட்டை)**
(யாழ் பிராந்திய அரசியற் பொறுப்பாளர், முன்னாள் அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர்)

**ஜனனம்:** 14 - 06 - 1962
**வீரமரணம்:** 21 - 08 - 1989

அம்பாறை அரசியலில் - ஒரு தலைவன்
மட்டுநகர் களத்தில் - ஒரு டயஸ்
யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பில் - கந்தசாமி
தன்னடக்கமுள்ள எங்கள் - தவராஜா
வேங்கைகள் - சாவதில்லை - வீழ்வதுமில்லை
நீங்கள் சிந்திய செங்குருதிக் கறைகளில்
எங்கள் வியர்வைபட்டு
உங்கள் இலட்சியத்தை நிச்சயம் சிறைமீட்கும்
காலம் உனை பிரித்தாலும்
காலன் உனை பறித்தாலும்
எழுதிவைத்த ஓவியம் போல் - என்றென்றும்
நீயிருப்பாய் எம் மனங்களில்

**சிற்றூரவை**

ஈச்சமோட்டை,
பாசையூர். [13904]

## தற்காலிக இடமாற்றம்

507, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.) தற்காலிகமாக கருவேம்பன் வளவு, இராச வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு மாற்றப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**த. பாலதயானந்தன்**
சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.)
யாழ்ப்பாணம்.

[14078]

## அஞ்சலி

20 - 08 - 90 அன்று காலை இடம்பெற்ற விமானத் தாக்குதலில் தனது காரியாலயத்திலிருந்து கடமை செய்யும் வேளை அகால மரணமடைந்த அச்சுவேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி வ. நடராசாவின் மறைவையொட்டி திகைப்படைந்துள்ளோம். எமது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்.

**உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,**
**வலி. கிழக்கு பி. சபை விஷேட ஆணையாளரும்,**
**ஊழியர்களும்.**

(C/5176)

அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராகவும்,
யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராகவும் இருந்த

**மேஜர் கந்தசாமி (டயஸ்)யின்**
(மயில்வாகனம் தவராசா ஈச்சமோட்டை)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

**தோற்றம்:** 14 - 06 - 62
**வீரமரணம்:** 21 - 08 - 89

விடுதலைச் சூரியன்! விடுதலைக் காற்று!
விதேசியப் படைகளை விரட்டிய வீரன்!
பகளம் மீதிலே... பாய்ந்ததோர் வேங்கை!

டயஸ்...
எங்கள் அன்னை பூமியை
அந்நியர் அபகரித்தபோது
நீ எழுந்தாய்
எட்டுத் திக்கும் அதிர நடந்தாய்
வேங்கையாய் எங்கள் வீதியில் திரிந்தாய்
எதிரியை எரிக்கும் போரிலே
நீ விழுந்தாய்

காலக் காற்று உனது சுவடுகளை அழிக்காது
நாட்கள் கழியும் உனது கனவுகள் கலையாது
உன் கனவுடன் நாங்கள் எழுந்துள்ளோம்.
உன் நினைவுடன் உனது பாதையில் நாங்கள்!

— தமிழீழ விடுதலைப் புலிகள் —

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா இரவீந்திரன் [ஆசிரியர்]

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியரும், வண். தெற்கு கொத்தணி உதவியாளருமான திரு. கந்தையா இரவீந்திரன் அகாலமரணமானார் என்பதை வித்தியாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு அறியத்தருகிறோம்.

அன்னாரின் மறைவிற்கு வித்தியாலய ஆசிரியர் கழகம் தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது.

**ஆசிரியர் கழகம்**

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். [13909]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கணபதிப்பிள்ளை நடேசர்**

**தோற்றம்:** 26 - 10 - 1913
**மறைவு:** 05 - 09 - 1986

**திதி: 21 — 08 — 1990**

அன்புள்ள அப்பா!
இன்று உங்கள் நான்காவது ஆண்டுத் திவசம். இந் நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பான
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (14079)

## ஓராண்டு நினைவஞ்சலி



**கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்** — படைப்பு: 14 - 01 - 1958
**கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன்** — 22 - 03 - 1962
**நாகமணி தில்லைநாதன்** — 30 - 03 - 1959

**அழிப்பு:** 21 - 08 - 1989
**திதி:** 09 — 09 — 1990

மூன்று சுடர்போல் முன்னே இருந்தீர்கள்
நூர்ந்து விட்டீர்களே! நொடிப்பொழுதில் ஒன்றாக
நேர்ந்த அவலங்கள் — நெஞ்சகத்தின் காயங்கள்
தீர்ந்து முடியாது செல்வர்களே நம்துயரம்

உங்களது ஆத்மா உய்திபெற அஞ்சலித்து நிற்கும்:

**குடும்பத்தினர்**

"வித்தனை"
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. [14075]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அகதி முகாம்; எதிர்த்து உண்ணாவிரதம்

## தமிழகத்தில் நடத்த ஏற்பாடு

— இராமேஸ்வரத்திலிருந்து உதயன் விசேட செய்தியாளர் —

இராமேஸ்வரம், ஆக. 21

தமிழகம் வந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை, திரும்ப அனுப்பி சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் கண்காணிப்பில் இலங்கையில் அகதி முகாம் நிறுவும் திட்டத்தை ஆட்சேபித்து இங்குள்ள அகதிகள் உண்ணாவிரதம் இருக்க உள்ளார்கள்.

மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகளே முதலில் உண்ணாவிரத இயக்கத்தை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதன் பின் இவ்வியக்கம் ஈழத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள ஏனைய சகல முகாங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

உண்ணாவிரதத்துடன் மட்டும் நிற்காமல், இந்தத் திட்டத்திற்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் இயக்கம், ஆட்சேப மகஜர்களை அனுப்புதல் ஆகியனவற்றிலும் தீவிரமாக ஈடுபட இங்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஈழத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசாங்கப் படைகளால் தமிழர்கள் கொலை செய்யப்படுவதை அடுத்து, தமிழகத்துக்கு 80 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு இதுவரை வந்துள்ளார்கள்.

அவர்களைப் பராமரித்துப் பாதுகாப்பதை ஒரு சுமையாகக் கருதி, இலங்கை அரசின் திட்டத்திற்குத் துணை போகும் விதத்தில் இந்தியாவும் சேர்ந்து ஐ. நா., செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றின் கண்காணிப்பில் இலங்கையில் அகதிமுகாம் ஒன்றை நிறுவுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

இந்தத் திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்து ஆட்சேப இயக்கங்களை நடத்த இங்கு வந்திருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஒரிஸா மாநிலத்தில் முதலில் தங்க வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இப்போது மண்டபம் அகதிகள் முகாமிலேயே தங்கி உள்ளனர்.

அவர்களும் ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை எதிர்க்கிறார்கள்.

அண்மையில் ஈழத் தமிழ் அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்த தமிழக அமைச்சர்களிடம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்ததாக அவர்கள் உதயனுக்குச் சொன்னார்கள்.

''தமிழர்களைக் கொண்டு ஊர்காவல் படை அமைக்கப் போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது. இந்நிலையில் நாம் தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டால், இலங்கை அரசால் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்படுவோம். விடுதலைப் புலிகளுக்கு எதிராக சண்டையிடவும் வற்புறுத்தப்படுவோம். மீண்டும் அந்த மாபெரும் தவறை இழைக்க நாம் விரும்பவில்லை.'' — என்று அவர்களில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதே வேளை இங்கு அகதிகள் நலனைக் கவனித்து வரும் ஈழத் தமிழர் ஒருவர் சொன்னார்:-

''ஈழத்திற்குக் கப்பல் அனுப்பி அகதிகளை அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். இந்நிலையில் நம்மை இங்கிருந்து வெளியேற்றி இலங்கையில் அமைக்கப்படும் முகாமுக்கு அனுப்புவதென்றால் அது இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு இந்தியாவும் துணை போவதாகவே அமையும். இப்படி ஒரு விஷப் பரீட்சைக்கு தமிழக முதல்வர் இணங்க மாட்டார் என்றே நாம் நம்புகிறோம்.

அகதி முகாம் அமைத்து வெளிநாட்டு அமைப்பின் பொறுப்பில் விடுவதாயின் அதனை இந்தியாவிலேயே செய்யட்டும்'' என்றார். (அ-9)

## திணைக்கள தலைவர்கள் கூட்டம்

யாழ் - செயலக ஊழியர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்குச் செயலகத்தில் நடைபெறும்.

சகல திணைக்களங்களின் தலைவர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அரச அதிபர் அழைத்துள்ளார். (இ - 3 - 5)

## விஜயகாந்த் பிறந்தநாள் பரிசு:
# ஈழ அகதிகளுக்கு உணவும் உடையும்

சென்னை, ஆக. 21

எதிர்வரும் 25 ஆம் திகதி நடிகர் விஜயகாந்த் தனது பிறந்தநாள் அன்று இராமேஸ்வரத்திற்குநேரில்சென்று இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உணவும், உடையும் வழங்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக நடிகர் விஜயகாந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எப்பொழுதுமே இல்லாதவாறு இலங்கையில் இன்று தமிழர் பாதிக்கப்படுவதும் தமிழ்க் குடும்பங்கள் நசுக்கப்படுவதும் அதிகமாகிவிட்டது. பிஞ்சு உள்ளங்கள் பரிதவிப்பதும் பசியால் வாடுவதும் அதைப்பார்த்து பெற்றவயிறுகள் துடிப்பதும் அதிகமாகிவிட்டது.

வேதனைகள்மறைந்துவிடும் என்று காத்திருந்தால் இலங்கையில் தமிழ் இனமே இல்லாமல் மறைந்துவிடுமோ என்று அச்சப்படும் அளவுக்கு தமிழர் படும் வேதனை அதிகமாகிவிட்டது.

சுவாசம் போய்க்கொண்டிருக்கும் நிலையிலே மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் தமிழர்கள்.......... தமிழ்க் காற்றைச் சுவாசிப்பதற்காக இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள், நம்மைநம்பி... நாம் ஆதரிப்போம் என்பதை நம்பி......

அந்த நல்லெண்ணத்தைச் செயற்படுத்துவதற்காகத்தான் இந்த ஆண்டு என்னுடைய பிறந்தநாளைக் கொண்டாடுவது இல்லை என்று முடிவெடுத்துள்ளேன்—என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [ஒ-எ]

## சட்டசபையில் இருந்து
# அ. தி.மு.க. இரு அணிகளும் நேற்று வெளியேற்றப்பட்டன
## காங்கிரஸாரும் வெளிநடப்பு

சென்னை, ஆக. 21

தமிழ்நாடு சட்டசபை நேற்றுக் காலை கூடிய போது, சபாநாயகரின்தீர்ப்புக்குக்கட்டுப்பட மறுத்த அ.தி.மு.க வின் இரு அணிகளின் உறுப்பினர்களும் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஜெயலலிதா அணியைச் சேர்ந்த எம்.எல்.ஏயும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எஸ்.ஆர். ராதாவும், போட்டிப் பிரிவின் தலைவரான திரு. திருநாவுக்கரசுவும்சபையில் ஆசன ஒதுக்கீடு பற்றி பேச முயற்சித்தனர். அதற்கு சபாநாயகர் இடமளிக்கவில்லை.

தொடர்ந்தும் அவர்கள் பேச முயற்சிக்கவே இரு அணியினரையும் வெளியேற்றும்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

அதன்பின்னர் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றைக் கிளப்ப இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. குமரி அனந்தனுக்கும் சபாநாயகர் அனுமதி மறுத்தார்.

அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் எம். எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். [உ-எ]

## லயன்ஸ் கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஆக. 21

கண்பார்வை குறைந்தவர்களுக்கு உதவும் முகமாக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் கண் சிகிச்சை முகாம் ஒன்றை எதிர்வரும் 25 ஆம் திகதி சித்தன்கேணி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்த இருக்கிறது.

கண் பரிசோதிக்கப்பட்டு தேவை ஏற்படின் இலவசமாக கண்ணாடியும் வழங்கப்படும்:

அகதியாக வந்துள்ளவர்களும் முகாம் அதிகாரிகளிடம் அத்தாட்சிக் கடிதத்துடன் சமுகமளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

# ம. எண்ணையுடன் பெற்றோல்; விளக்கு வெடித்து பாலகர் காயம்

நெடுந்தீவு, ஆக. 21

போத்தல் விளக்கு வெடித்துச் சிதறியதால் இரண்டு குழந்தைகள் தீக்காயங்களுக்கு ஆளாகினர்.

ஏற்கனவே பெற்றோல் இருந்த போத்தலில் மண்ணெண்ணையை வாங்கி வைத்திருந்த ஒருவர் வீட்டில் இருந்த போத்தல் விளக்கில் அந்த எண்ணையை விட்டு கொளுத்தினார். பெற்றோல் கலந்திருந்ததால் விளக்கு வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் மேரி இமெல்டா (3), சுதாசரன் (1) ஆகிய இரு குழந்தைகளும் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகி உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நெடுந்தீவு கிழக்கு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேதநாயகம் என்பவரது வீட்டில் இடம் பெற்றது. (அ-111)

## இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளை

யாழ்ப்பாணம், ஆக. 21

இலங்கை வங்கியின் பிரதான கிளை (ஆஸ்பத்திரி வீதி) இன்று 21 ஆம் திகதியும் நாளை 22 ஆம் திகதியும் திறந்திருந்தாலும் வாடிக்கையாளர்களுக்கு எந்தவித சேவையும் நடத்தப்பட மாட்டாது என்று வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார். (இ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள அகதிகள் முகாம்களின் பொறுப்பாளர்கள் அல்லது பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

இக்கூட்டம் நாளை புதன் கிழமை 22 - 8 - 90 அன்று காலை 10.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் முகாம்களுக்கான உணவு விநியோகம் சம்பந்தமாக ஆராயப்படும். (அ-மு)

# இன்று வரும் கப்பலில் கறிச்சரக்கு பொருள்களும்

யாழ்ப்பாணம், ஆக. 21

கொழும்பில் இருந்து புறப்பட்டு இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் பருத்தித்துறை வந்து சேரும் கப்பலில் கறிச்சரக்குப் பொருள்களும் வருகின்றன.

இன்று நண்பகல் கப்பல் வந்து சேர்ந்தாலும், நாளை காலையே இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1700 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்கள் இந்தக் கப்பலில் வருகின்றன.

இந்தக் கப்பலில் 5 மெற்றிக் தொன் சீரகம், 5 மெற்றிக் தொன் மஞ்சல், 5 மெற்றிக் தொன் மிளகு, 10 மெற்றிக் தொன் மல்லி, 5 மெற்றிக் தொன் வெள்ளைப்பூடு ஆகிய கறிச்சரக்குப் பொருள்களும்-

850 மெற்றிக் தொன் அரிசியும், 400 மெற்றிக் தொன் சீனியும் -

60 மெற்றிக் தொன் லக்ஸ் பிறேயும், 10 மெற்றிக்தொன் விட்டாஸ் பிறேயும் -

5 மெற்றிக்தொன் தேயிலையும், 5 மெற்றிக் தொன் சோப்பியும் கொண்டுவரப்படவிருக்கின்றன.

அத்துடன் 5 மெற்றிக் தொன் வாசச்சவர்க்காரமும், 5 மெற்றிக் தொன் தோய்க்கும் சவர்க்காரமும் வருகின்றன. (இ - 3 - 5)

# 339 தபால் பொதிகள் கப்பலில் இன்று வருகின்றன

வெளிநாட்டு, உள்நாட்டு கடிதங்கள் கொண்ட 339 தபால் பொதிகள் கப்பலில் இன்று வருகின்றன.

வாகனப் போக்குவரத்து சீராக இல்லாததால் இனி கப்பல் மூலமே தபால்கள் கொண்டு வரப்படும். அதே போன்று இங்கிருந்தும் தபால்களை கொழும்புக்கு கப்பலில் அனுப்பவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவுடன் தபால் திணைக்கள அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

# கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் மூடப்பட்டது
## மொழிப் பிரச்சினை காரணம்!

கொழும்பு, ஆக. 21

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு மேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ இந்த தீர்மானத்தை எடுத்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆலய வழிபாடுகளில் அனைத்து மொழி பேசுபவர்களுக்கும் உரிய இடமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்ததென்றும் -

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் குழு ஒன்று காலை முதல்மாலை வரை தேவாலயத்தை ஆக்கிரமித்து வந்தது என்றும்-

நாட்டிலும் கொழும்புத் தேவாலய சூழலிலும் அமைதியைப் பேணும் வகையில் தேவாலயத்தை மறு அறிவித்தல்வரை மூடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாயும் கடந்த ஞாயிறு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் மேற்றிராணியார் வண. பிதா மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். (அ-எ)

# மரநிழலில் வாழும் அகதிகளுக்கு தற்காலிக குடிசைகள்
## விரைவில் கட்டிக் கொடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 21

திருமலையில் இருந்து அகதிகளாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வந்து தங்குவதற்கு வசதி இன்றி மர நிழல்களின் கீழ் தங்கியுள்ள 2,600 குடும்பங்களுக்கு (சுமார் 13,000 பேருக்கு) தற்காலிகக் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

மழை காலம் நெருங்குவதால் இந்தக் குடிசைகளை விரைவில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 260 லட்சம் ரூபாவை வழங்க சம்மதித்திருப்பதாக யாழ். செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களிலும் தங்க வசதி இன்றித் தவிக்கும் இந்தக் குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் அரசாங்க அதிபர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் என்றும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வட்டாரங்கள் தந்த தகவல்களின் பிரகாரம்-

★ தென்மராட்சிப் பகுதியில் கச்சாய் தேவாலயத்தைச் சுற்றுவரவும், கொடிகாமம் தேவாலயத்தைச் சுற்றுவரவும் 200 குடும்பங்கள் (சுமார் 1000 பேர்) இவ்வாறு வாழ்கிறார்கள்.

சம்பந்தப்பட்ட தேவாலயங்களிலும், அப்பகுதிப் பாடசாலைகளிலும் இடமில்லாததாலும், இக்குடும்பங்கள் வேறு குடும்பங்களுடன் சேர்ந்து வாழ விரும்பாததாலும் மர நிழலின் கீழ் வாழ வேண்டியநிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

★ வடமராட்சியில் தாளையடி, கற்கோவளம் ஆகிய பகுதிகளில் 800 குடும்பங்கள் (சுமார் 4,000 பேர்) மேற்கூறிய காரணங்களால் மர நிழல்களில் வாழ்கிறார்கள்.

★ முல்லைத்தீவில் அனேகமாக அலம்பிலில் 1600 குடும்பங்களும் (சுமார் 8,000 பேர்) அதே காரணங்களால் மர நிழல்களில் வாழ்கிறார்கள்.

இவர்களுக்காக ஒரே இடத்தில் பத்துக் குடிசைகள் விதம் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று யாழ். செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(குறிப்பு: ''மர நிழலில் வாடும் 2,600 திருமலைத் தமிழர்'' என்ற தலைப்பில் 30-7-90 ஆம் திகதிய உதயனில் வெளிவந்த செய்தியில் தென்மராட்சியில் மட்டுமே அகதிகளுக்கு அந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது குறித்து சில தொண்டர் ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட அகதிகள் எங்கே இருக்கிறார்கள் எனக் கேட்டு எழுதி ஒருத்தரும் [illegible] உதவும் விதத்திலேயே மேற்கண்ட புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறோம்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் தகவல்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட செய்தியில் தென்மராட்சி சம்பந்தமான எண்ணிக்கையில் தவறு ஏற்பட்டுவிட்டது என்பதையும், ஏனைய பகுதிகளில் மர நிழல்களில் தங்குவோரின் எண்ணிக்கை அச்செய்தியில் சேர்க்கப்படாமல் தவறிவிட்டது என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். — ஆ-ர்]

# வண. பிதா ஹேர்பியர் கொலையுண்டதாகத் தகவல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை கடத்தப்பட்ட கிறிஸ்தவ பாதிரியாரான வண. பிதா ஈ. யூஜின் கேர்பியர் கொல்லப்பட்டு விட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பில் உள்ள சென். மைக்கல் கல்லூரியில் கூடைப் பந்து விளையாட்டு பயிற்சியாளராக பணி புரிந்த அவருக்கு வயது 67.

வாழைச்சேனையில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கையில் இவர் திடீர் என காணாமல் போய்விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

முஸ்லிம் ஆயுதக் குழு ஒன்றினால் இவர் கடத்திச் செல்லப்பட்டார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

42 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு வந்து தனது பணியை இவர் ஆரம்பித்தார். (உ-எ)

## இயக்கச்சி குண்டு வீச்சு

கடந்த வெள்ளிக்கிழமை இயக்கச்சிப் பகுதியில் 'பொம்மர்' விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் இயக்கச்சிப் பகுதியில் மூன்று கடைகள் சேதமடைந்தன. பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் இதே இடங்களில் குண்டுகள் போடப்பட்டதனால் வீடு ஒன்று சேதமடைந்தது: (இ-144)

# சாவகச்சேரிப் பகுதியில் நாளாந்தம் விமான, ஹெலி தாக்குதல்கள்

சாவகச்சேரி, ஆக. 21

சாவகச்சேரிப்பகுதியில் இப்போதுபொம்மர்களும், ஹெலிகளும் அடிக்கடி தாக்குதல்களை நடத்திவருகின்றன.

கடந்தவாரத்தில் புதன், வியாழன், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரிப் பகுதியில் பொம்மர்கள், ஹெலிகள் கடும் தாக்குதல்களை நடத்தின.

நேற்று திங்கட்கிழமையும் நுணாவில் பகுதியில் இரு பொம்மர்கள் காலையில் தாக்குதல்களை நடத்தின.

ஞாயிறுகாலை எட்டு மணியளவில் சாவகச்சேரியில் வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் றொக்கட் தாக்குதல்களை நடத்தின.

சென்ற வியாழக்கிழமை 12 குண்டுகளைப் போட்ட அதே இடத்திலேயே றொக்கெட் குண்டுகளும் விழுந்தன. இரண்டில் ஒன்று மட்டுமே வெடித்தது.

காலை ஒன்பது மணியளவில் சரசாலைப் பக்கமாக ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் வேற்பிள்ளை வாசிகசாலைப் பக்கத்தில் ஹெலி தாக்குதல் நடத்தியது. அதில் இருவர் காயமடைந்தனர்.

வியாழக்கிழமை பகல் இரண்டு மணியளவில் மூன்று பொம்மர்கள் கடும் தாக்குதல்களை நடத்தின. மக்கள்பீதியுடன் பதுங்குகுழிகளை நாடி மணித்தியாலக் கணக்கில் உள்ளே இருந்தனர். அதனால் சிலர் மயக்கமுற்றனர்.

நவீன சந்தையின் தெற்கே தனங்கிளப்பு வீதியில் மணியந்தோட்டத்தில் சுமார் 15க்கு அதிகமான குண்டுகள் வீசப்பட்டன. மந்தியில் இருந்த வீடு சிறிது சேதமுற்றது. பெண் ஒருவர் காயமுற்றார்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் காலையும் மாலையும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலையில் நுணாவிலில் இடம்பெற்ற தாக்குதலில் கடை ஒன்று சேதமடைந்தது. ஐவர்காயமடைந்தனர்.

மாலையில் எட்டுத் தடவைகள் சுற்றி வட்டமிட்ட இரு பொம்மர்கள் தபாற்கந்தோர் வீதியிலும், பெருங்குளச்சந்தியிலும் குண்டுகளை வீசின.

தபாற்கந்தோர் வீதியில் இருவீடுகள் சேதமடைந்தன. முதியவர் ஒருவர் காயமடைந்தார்.

பெருங்குளச்சந்தியிலும் வேம்பு, பனைகள் பல முறிந்தன. (அ-31)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

21 - 8 - 1990 செவ்வாய்க்கிழமை


## 25 ஆம் திகதி தொடக்கம்

# சிகரெட், சாராயம் விற்பனை தடை!

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 21

"தமிழீழத்தின்மீது முழுஅளவிலான பொருளாதாரத் தடையை ஸ்ரீலங்கா அரசு விதித்துள்ளது. இந்த நிலையில் எமது பணம் சிங்கஎப் பிரதேசத்துக்குப் போவதைத் தடுப்பதற்காக எதிர்வரும் 25ஆம் திகதி முதல் கொழும்பிலிருந்து வரும் சிகரெட், சாராயம் ஆகியவற்றின் விற்பனையைத் தடைசெய்துள்ளோம்'.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அத்தியாவசியப் பொருள்களுக்குத் தடை விதிப்பது என்ற அரசின் திட்டத்துடன் பொருளாதாரத்தடை நின்றுவிடவில்லை. மக்களின் ஒவ்வொரு விடயத்திலும் அதன் தாக்கம் இருக்கும்.

இந்தத் தாக்கங்களைக் கண்டறிந்து முதலே மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது. இதன் மூலம் அந்தத் தாக்கங்களில் இருந்து ஓரளவு எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்:

இன்று அரசு ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத்தடையால் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. இந்தவிலைஉயர்வால் கிடைக்கும் பணம் சிங்கள நாட்டுக்கே போகிறது.

இவ்விதமாக அத்தியாவசியப் பொருள்களுக்காகப் பணம் வெளியில் செல்லும் அதேநேரம் அவசியமற்றதும், உடலுக்குத் தீங்கு விளைவிப்பதுமான சாராயம், சிகரெட் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதாலும் எமது மக்களின் பணம் ஸ்ரீலங்காவுக்கே செல்கிறது.

எனவே இவற்றைக் கொள்வனவு செய்வதையும், விற்பனை செய்வதையும் தடை செய்யத் தீர்மானித்துள்ளோம். இதன் காரணத்தை உணர்ந்து மக்கள் ஆதரவு தரவேண்டும்.

இந்த முயற்சிக்கு ஊறு விளைவிக்கும் முகமாக சாராயம், சிகரெட் விற்பனை இடம்பெறுமானால் அவைபறிமுதல் செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

— இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## தேசிய பாதுகாப்பு நிதிக்கு பணம் திரட்டும் இளைஞர்கள்

கொழும்பு, ஆக. 21

தேசிய பாதுகாப்பு நிதிக்கு பணம் திரட்ட கொழும்பு நகரில் இளைஞர்கள் உண்டியல்களுடன் வீதிகளில் திரிகிறார்கள்.

பட்டியல்களுடன் இளைஞர்கள் தமிழர்களின் வீடுகளுக்குச் செல்கிறார்கள் என்றும், அவர்களை மிரட்டிப் பணம் கேட்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## நெடுந்தீவு படகுச்சேவை ஸ்தம்பிக்கும்?

நெடுந்தீவு, ஆக. 21

நெடுந்தீவுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் இடம் பெற்று வந்த அரச படகுச் சேவை எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து இரண்டாகக் குறைந்தது.

இப்போது கையிருப்பில் உள்ள எரிபொருள் இன்னும் மூன்று நாட்கள் சேவையாற்றவே போதும் என்பதால் படகுச்சேவை முற்றாக ஸ்தம்பிதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(அ - 111)

## காங்கேசன் மக்கள் வங்கி தெல்லிப்பழைக்கு

யாழ்ப்பாணம், ஆக. 21

தற்சமயம் மூடப்பட்டுள்ள காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளையை தெல்லிப்பழையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க கட்டடத்தில் இந்த வங்கிக்கிளை இயங்கவிருக்கிறது. [இ-3]

## இலக்குகள் மீதே தாக்குதல் நடத்துவதாக கூறுவது சரியல்ல

### பி. பி. சி. தகவல்

கொழும்பு, ஆக. 21

யாழ்ப்பாணப் பகுதியில் குறிப்பிட்ட இலக்குகள் மீதுதான் விமானப்படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது. ஆனால் சுயேச்சையான தகவல்கள் இதற்கு முரணாக உள்ளன. பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர்களது இருப்பிடங்கள் சேதம் அடைந்துள்ளன என்றும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் அரசுப்படைகள் நடத்தும் விமானத்தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ்தொபர் மொரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அரசுப் படை விமானங்கள் தினசரி விமானத் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும்–

முல்லைத்தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசுப் படை விமானங்கள் பல மணித்தியாலங்கள் விமானத் தாக்குதலை நடத்தியதாகவும் விடுதலைப்புலிகள் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்றும் பி. பி. சி செய்தியாளர் கிறிஸ்தொபர் மொரிஸ் தெரிவித்தார். (இ-எ)

## கப்பலில் வர 4,000 பேர் இந்து மாமன்றத்தில் பதிவு

கொழும்பு, ஆக. 21

கொழும்பில் இருந்து தமிழ் பகுதிகளுக்கு வருவதற்காக சுமார் 4,000 பேர் இந்து மாமன்றத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளுக்கு செல்வதற்குக் காத்திருக்கும் தமிழர்களுக்கு கப்பல் ஒழுங்கு செய்வதாக இந்து மாமன்றம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பக் கப்பல் ஒழுங்கு செய்யும் பணியில் இந்து மாமன்றம் ஈடுபட்டுள்ளபோதும், இன்னும் சரியான முடிவு எடுக்கப்படவில்லை என்று நிர்க்கதியான தமிழர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி பதுங்குகுழியில் பிரசவம்!

யாழ்ப்பாணம், ஆக. 21

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணி ஒருவர், அங்கு பதுங்குகுழியில் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின் போது, மேற்படி கர்ப்பிணித் தாய் பதுங்குகுழியில் தஞ்சம் புகுந்திருந்தார்.

அந்தவேளையில் தான் பிரசவம் நடந்தது. பதுங்குகுழிக்குள்ளேயே டாக்டர்கள்சிகிச்சை அளித்தார்[ஒ-31]

## வடமராட்சி கிழக்கில் அடிக்கடி பீரங்கித் தாக்குதல்

தாளையடி, ஆக. 21

கடற்படையினரினதும் விமானப்படையினரினதும் தாக்குதல்கள் வடமராட்சி கிழக்கிலும் அடிக்கடி நடத்தப்பட்டுவருகின்றன.

இரவுவேளைகளில் வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

ஆகாயத்திலிருந்தும் சில இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டுவருகின்றன.

இரவு வேளைகளில் ஹெலியில் இருந்து 'பரா'வெளிச்சக் குண்டுகள் வீசப்பட்டு துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றது. இம் மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளிலும் இரவு நேரங்களில் கட்டைக்காட்டுப்பகுதியில் ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

கடந்த வெள்ளிக்கிழமை (17ஆம் திகதி) அதிகாலை தாளையடிக் கடற்பகுதியில் இருந்து, கடற்படையினரால் ஏவப்பட்ட குண்டுகள் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைச் சுற்றாடல்களில்வந்து விழ்ந்தன.

இத்தாக்குதலின்போது வீடு ஒன்று சேதமடைந்துள்ளதுடன் கால்நடைகளும் இறந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இப்பகுதியில் கடற்படையினரின் தாக்குதல்கள் இடம்பெற்றன. (அ-144)

## ஈழ அகதிகளுக்கு பாதுகாப்பளிக்க இந்திய கடற்படை உஷார்நிலை

### இராமேஸ்வரத்தில் வெள்ளி முதல் இயங்குகிறது

இராமேஸ்வரம், ஆக. 21

நடுக்கடலில் ஈழ அகதிகளுக்கு விபரீதம் ஏற்படாது தடுப்பதற்காகவும், இந்திய மீனவருக்குப் பாதுகாப்பு அளிக்கும் முகமாகவும் இராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்ட இந்திய கடற்படைத் தளம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் செயற்படத் தொடங்கியது.

இப் பிரிவுக்கு லெப்டினன்ட் கமாண்டர் எல். கே. ஜா பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

60 வீரர்களை கொண்ட இப் பிரிவு ரோந்துப் பணிக்கு 20 படகுகளை பயன்படுத்தி வருகிறது. இப் படகுகளில் இயந்திரத் துப்பாக்கி,மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன,

நடுக் கடலில் ரோந்து சுற்றிவரும் இந்திய யுத்தக் கப்பல்களுடன் இணைந்து இந்தப் படகின் ரோந்துப் பணிநடைபெறுகிறது: (ஒ-ா)

## குவைத்தில் அமைந்திருக்கும் பிறநாட்டு தூதரகங்களை மூடுமாறு ஈராக் கோரிக்கை

பக்தாத், ஆக. 21

குவைத்தில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் மூடிவிடவேண்டும் என்று ஈராக் அரசாங்கம் நேற்று உத்தரவிட்டது.

உத்தரவை மீறி மூடப்படாமல் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த -ராஜதந்திரிகள் அனைவரும் சாதாரண அந்நிய நாட்டுப் பிரசைகளாகவே கருதப்படுவர் என்றும் பக்தாத் அரசு கூறியுள்ளது. [உ-எ]

## எரிபொருள் பற்றாக்குறை; அவசர சிகிச்சை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 21

மானிப்பாயில்இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு தேவையான எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் —

இதனால் அவசர சிகிச்சைகள் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் அறிய வருகிறது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க பொதுமக்கள், நலன் விரும்பிகள் எரிபொருளைத் தந்துதவ வேண்டும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (உ-5)

## 9 ஆயிரம் லீற்றர் ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஆக. 21

கொழும்பில் இருந்து இன்று வரும் கப்பலில் ஒன்பதாயிரம் லீற்றர் மண்எண்ணெய் வருகிறது.

45 பீப்பாய்களில் இந்த எண்ணெய் வருகிறது. (இ-3-5)

## மேஜர் டயஸ் நினைவஞ்சலி கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அம்பாறை மற்றும் யாழ். மாவட்ட முன்னாள் அரசியல் பொறுப்பாளர் மேஜர் டயஸின் (கந்தசாமி) ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்;

கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். (ஒ)

## தமிழினக்------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்கள் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கட்டமைப்புகள், மற்றும் ஸ்தாபனங்களின் அழிவுக்கும் வழிவகுக்கும். அத்துடன் நாட்டின் பொதுவான பொருளாதாரத்தையும் அழித்துவிடும்.

ஆகவே உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு கொடுக்கும் பலதரப்பட்ட நிதி உதவிகளையும் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகவங்கி ஊடாக இலங்கைக்கு வழங்கும் உதவிகளை உடனடியாக நிறுத்தும்படி உதவும் நாடுகளை நீங்கள் கோர வேண்டும்.

-இப்படி உலக [illegible] தலைவர் திரு.கொன்பிலை, இந்த அமைப்பு [illegible] ளது. (உ-எ)

## கடற்படைப் படகை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுருக்கம் வருமாறு:-

வள்ளத்தில் 60 பேர் சென்றார்கள். அவர்களில் ஏழுபேர் வயோதிபர்கள், 25 பெண்கள், இருபதுபேர் இளைஞர்கள். முன்னால் சென்ற இரண்டு வள்ளங்களைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வள்ளம் சென்றது. இரவு முழுவதும் படகு கடலில் அலைந்தது. அடுத்த நாள் விடிந்தது. காலை எட்டு மணி இருக்கும் தமிழகக் கரையை வள்ளம் அண்மித்து விட்டதாகப் பயணிகள் நினைத்தார்கள். படகு ஒன்று தொலைவில் தெரிந்தது. இந்தியக் கடற்படைப் படகாகத்தான் இருக்கும் என்று பயணிகள் நினைத்தனர். படகோட்டி உட்பட எல்லோரும் கையசைத்து அந்தப் படகை அழைத்தனர்.

படகு அருகில் வந்தபின்னர் தான் விலை கொடுத்து வினையை வாங்கியது தெரிய வந்தது! சம்பந்தப்பட்ட படகு இலங்கைக் கடற்படையினரின் படகு என்பதையும், வள்ளம் தலைமன்னார்ப் பகுதியிலேயே நிற்கிறது என்பதும் புரிந்தன.

வள்ளத்தில் இருந்த இளம் வயதினர் கடற்படைப் படகுக்கு மாற்றப்பட்டனர்; மிகுதிப் பயணிகளுடன் படகைத் தொடர்ந்து வருமாறு வள்ளத்துக்குப் பணிக்கப்பட்டது.

இளைஞர்களுக்கு கடற்படை படகில் வைத்தே 'பூசைகள்' கிடைத்தன; தலைமன்னார் முகாமுக்குச் சென்றதும் இருதய நோயாளி, கால் ஊனமுற்றோர் உட்பட 6 பேர் உடனே விடுவிக்கப்பட்டனர். படகில் கூட்டிச் செல்லப்பட்ட இளைஞர் உட்பட ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டனர். (அ-90)

## திருநாவுக்கரசு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்ட விவகாரம் தற்சமயம் நீதிமன்ற விசாரணைக்கு விடப்பட்டிருப்பதால் இந்த மூன்று எம். எல். ஏக்களும் அ. தி. மு. கவில் இருக்கிறார்களா அல்லது வெளியேற்றப்பட்டு விட்டார்களா என்பது பற்றி தன்னால் தீர்ப்பளிக்க முடியாது என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

திருநாவுக்கரசு அணிக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் ஏனைய 4 அ.தி.மு.க. சட்ட சபை உறுப்பினர்களும் கட்சியை விட்டுத் தாங்களாகவே விலகிவிட்டார்கள் என்பதற்கான சான்றிதழ்கள் தன்னிடம் சமர்ப்பிக்கப்படாததால், அவர்கள் மீது கட்சி தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் சபாநாயகர் தீர்ப்பளித்தார்.

அ. தி. மு. க. சட்ட மன்றத் தலைவர் திரு. ராதா [illegible] மீது சபாநாயகர் இத்தத் [illegible] [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருவேங்கட அம்மா விஸ்வநாதக்குருக்கள் [மீனாம்பாள்]

காரைநகர் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திருவேங்கட அம்மா 19-8-90 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதீஸ்வரக் குருக்கள், சிவயோகசுந்தராமபாளின் மகளும், கா. விஸ்வநாதக்குருக்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரசர்மா, ராசலட்சுமி, கார்த்தியாயினி, ஈஸ்வரக் குருக்கள் [பிரதமகுரு காரைநகர் சிவன்கோவில்], பரமேஸ்வரி, ஈஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வர சர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ண ஐயர், ஷேசாத்திரிஐயர், குமாரசாமிக் குருக்கள், மலர், பத்மலோசனி, மகேஸ்வர சர்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [20-8-90] சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

சடையாளி, காரைநகர்.

தகவல்: குடும்பத்தினர்

[13907]

### சிவஸ்ரீ சி. சுப்பிரமணியக் குருக்கள் ( சுப்பையாக் குருக்கள் )

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சி. சுப்பிரமணியக் குருக்கள் (சுப்பையாக் குருக்கள்) காலமானார். அன்னார் அம்மணி அம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமாஸ்கந்த சர்மா, விசாலாட்சி அம்மாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கெங்காதரக் குருக்களின் மாமனாரும், மதுமதி, சோமேஸ்வரக் குருக்கள் (மலேசியா), சந்திரமௌலீஸ்வரன், வேங்கடரமணன், வேணுகோபால், ரஜனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்: சந்திரசேகர சர்மா (பெறாமகன்)

புங்குடுதீவு.

(14081)

## மரண அறிவித்தல்

### போலற் சோஜினி ஜோர்ஜ்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சோஜினி ஜோர்ஜ் 19-8-90 இல் காலமானார். அன்னார் திரு. B. M. ஜோர்ஜின் அன்பு மனைவியும், திரு. G. S. அன்ரனிராஜா, திருமதி. புஷ்பம் அன்ரனிராஜா அவர்களின் அன்பு மகளும், திருமதி வினோதினி வின்சென்ட், ஜீவநேசன், மதுரநேசன், அமலநேசன், தூயநேசன், ஜெபநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி ராஜகுமாரி ஜெபராஜா, விஜயகுமார் (U. S. A. ), Dr. தேசாதி (South Africa), திருக்குமார் (வட்டக்கச்சி), திருமதி தாமரைக்குமாரி ஞானப்பிரகாசம், திருமதி வான்மதி யுரேந்திரன் (U. S. A.), சாந்தக்குமார் (U. S. A.), திருமதி சாந்திநிலா மோகன்ராஜ் (கொட்டாஞ்சேனை, ஜனாதினி (U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு A. P. வின்சென்டின் (Norway) அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் அடக்க ஆராதனை 22-8-90 காலை 7. 30 மணியளவில் சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்று, பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திரு B. M. ஜோர்ஜ்.

இல; 68 குருசோல்ட் வீதி, யாழ்ப்பாணம்.

(13908)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org